முருகப்பெருமான் துணை

**மகான் குதம்பைச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.06.2023**, வியாழக்கிழமை

1. தவராஜனே அரங்கா போற்றி
தயவுமிக்க ஞான வழிகளை
அவனியில் அருள வந்திட்ட
ஆறுமுக ஞானியே போற்றி
2. போற்றியே சோபகிருது விடை திங்கள்
புகலுவேன் மூவாறு திகதி குருவாரம்

(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 18 ம் நாள், 01.06.2023, வியாழக்கிழமை)

ஆற்றல்பட அறிவுரை ஆசிதனை
அருளுவேன் குதம்பைச்சித்தர் யானும்
3. யானுரைக்க உலகம் உய்வுபெற
உண்மைநிறைந்த அதிகாரமும்
ஞானம் கூடிய தலைமையுமாக
நாடெங்கிலும் உருவாக வேண்டும்
4. வேண்டியே இந்தவித மாற்றம்
வையகம் கண்டு சிறக்க
உண்டாக வேணும் ஆறுமுகனார்
உயர் வழிபாடு நெறி முறைகள்
5. முறையாக மக்கள் கடைபிடிக்க
முருகப் பெருமான் அம்சமாக
பேருலகில் அருள வந்துமே
பிரணவக்குடில் படைத்த அரங்கன்
6. அரங்கன் வழிகாட்டலாகவே
ஆறுமுகப் பெருமான் வழிபாடு
வரங்கள்பெற சரவண சோதி
வழிபாடாகச் செய்து வர
7. வருகவே நாடெங்கிலும் மாற்றம்
வந்தடையும் உண்மை வடிவாக
தரும குணம் தயவும் மிஞ்சி
தலைமையும் ஞான அம்சமாக

8. அம்சமாக மாற்றம் கண்டு
அதிகார வர்க்கங்களுமே
இம்மை மறுமை சார்ந்த
இயம்பிடுவேன் அறிவுத் தெளிவு கண்டு

9. கண்டுமே கயமை களவு
கடமை மீறும் லஞ்ச லாவண்யம்
உண்டான தீவினைகளை விட்டு
உண்மை செயல்பாடு கொண்ட

10. கொண்ட ஞானவான்களாக
குவலயம் வளர்ச்சி காணும்படி
தொண்டினை சிறப்பாக வழங்கி
தேசிகன் வழிகாட்டலின் வழி

11. வழிவழி வருங்காலங்களிலும்
வடிவேலன் வழிபாடோங்கி
அழிவிலா ஞான ஆட்சியாக மாறும்
அறிவித்த அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—